29 OCT 2010

## <u>சுருக்கம்</u>

பணிக்குழு – திரு வி. ராமசுப்பிரமணியன், முன்னாள் தட்டச்சர், திருப்பூர் நகராட்சி – சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (இருபதாண்டு) எண்.95** **நாள்:21.10.2010.**

**படிக்கப்பட்டன:**

1. சென்னை உயர்நீதி மன்ற நீதிப் பேராணை எண்.31544/2006–ன் தீர்ப்பு, நாள் 22.04.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.44106/2010/கே3, நாள் 01.10.2010.

----

**<u>ஆணை:–</u>**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு வி. ராமசுப்பிரமணியன், முன்னாள் தட்டச்சர், திருப்பூர் நகராட்சி, தற்போது வருவாய் உதவியாளர், சேலம் மாநகராட்சி அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை எண்.31544/2006 (அசல் மனு எண்.9377/97)ல் உயர்நீதி மன்றத்தால் 22.04.2009–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் மீதான அறிக்கையில், திருப்பூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தினக்கூலிப் பணியாளராகப் பணிபுரிந்த திரு வி. ராமசுப்பிரமணியனை அரசாணை (முப்பதாண்டு) எண்.82, நாள் 30.06.1995–ல் 1970–ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிப் பொதுப்பணி விதி 3(c)(i) மற்றும் 6–க்கு விலக்களித்து தட்டச்சராக நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டது என்றும், இதன் மீது அம்மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு 10.07.1995 அன்று தற்காலிகமாக தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டு தனியர் 12.07.1995–ல் பணியை ஏற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

2. மேலும் அவர், அரசாணை (நிலை) எண்.266, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 15.10.1996–ல் தினக்கூலி பணியாளர்கள் பதவி உயர்வு தொடர்பாக அவ்வப்பொழுது வெளியிடப்பட்ட அரசாணைகளை பட்டியலிட்டு அனைத்தையும் ரத்து செய்துள்ளது என்றும், மேலும், இந்த ஆணைகள் மூலம் பணியிடம் வழங்கப்பட்ட பணியாளர்களை அவர்கள் முன்பு பணியாற்றிய பணியிடங்களிலேயே பணியிறக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், இந்த பட்டியலில் திரு வி. ராமசுப்பிரமணியத்தை தட்டச்சராகப் பணி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ள அரசாணையும் அடங்கும் என்றும், திரு வி. ராமசுப்பிரமணியன், மேற்காணும் உத்தரவினை எதிர்த்து தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் (ஓ.ப.6244/98) வழக்குத் தொடர்ந்து தமக்கு சாதகமான தீர்ப்பினை பெற்றதால் தனியர் பணியிறக்கம் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும், தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம், 61 பணியாளர்களுக்கு 11.02.1997–ல் வழங்கிய தீர்ப்பினை தொடர்ந்து அரசு கடிதம் எண்.32849/நப.3/97–1, நாள் 03.10.1997–ல் திரு வி. ராமசுப்பிரமணியத்தின் நியமன ஆணையை ஏன் ரத்து செய்யக் கூடாது என்பதற்கான விளக்கம் கோரப்பட்டுள்ளது என்றும், இதற்கு பதில் அளிக்க அவகாசம் கோரி தனியர் விண்ணப்பித்து விட்டு, தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் (அசல் மனு எண்.9377/97–ல்) வழக்குத் தொடர்ந்து உறுத்துக் கட்டளை (Stay) பெற்றார் எனத் தெரிவித்துள்ளார்.

4. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும், இவ்வழக்கு உயர்நீதி மன்றத்திற்கு நீதிப் பேராணை எண்.31544/2006 ஆக மாற்றப்பட்டு 22.04.2009 நாளிட்ட தீர்ப்பில் தனியர் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் தடையாணை பெற்று தொடர்ந்து பல வருடங்களாக பணியாற்றிவரும் நிலையில், தனியரை அவரது பணிநியமனம் மற்றும் தகுதி குறித்த விவரங்களுடன், ஒரு மனுவினை அரசுக்கு அளிக்குமாறும், அரசுக்கு தனியர் மனு அளித்த மூன்று மாத காலத்திற்குள் அரசாணை (பத்தாண்டு) எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.03.2005–ல் வழங்கியுள்ள உத்தரவைப்போல் ஆணை பிறப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளது என்றும் தெரிவித்து, சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவின்படி திரு வி. ராமசுப்பிரமணியன், முன்னாள் தட்டச்சர், திருப்பூர் நகராட்சி, தற்போது வருவாய் உதவியாளர், சேலம் மாநகராட்சி அவர்களின் பணியினை 12.07.1995–லிருந்து வரன்முறைப்படுத்தலாம் என பரிந்துரை செய்து அரசின் ஆணைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

5. மேற்கூறிய சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், திரு வி. ராமசுப்பிரமணியன், முன்னாள் தட்டச்சர், திருப்பூர் நகராட்சி, தற்போது வருவாய் உதவியாளர், சேலம் மாநகராட்சி அவர்களின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 12.07.1995–லிருந்து பணிவரன்முறைப்படுத்தலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 108.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை.
நகராட்சி ஆணையர், திருப்பூர்.
ஆணையர், சேலம் மாநகராட்சி.

<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
21/10/2010